பகுதிகளிலே இடையூறாக இருக்கின்றன என்பது ஒரு பொதுவான கருத்து. குடியிருப்புப் பகுதி அல்லாத பகுதிகளிலே, எந்த இடத்தை யார் விரும்பு கிறார்களோ அங்கு வைத்துக்கொள்வதற்கு அனுமதி கேட்டு, அந்த அனுமதி அளிப்பது நியாயமாக இருந்தால், அதை வழங்குவதற்கு மாநகராட்சிக்கு ஒரு அதிகாரம் வருகிறது. இதற்கு முன்னால், அனுமதி இல்லாமலே அப்படி ஒரு சில தொழிற்சாலைகள் ஏற்பட்டன. மோட்டார் இல்லாத, எலக்ட்ரிசிடி இல்லாத இயந்திரங்கள் இருக்கின்றன என்றால், எந்த இடத்தில் வேண்டுமென்றாலும் வைத்து விடுகின்றார்கள். ஆகவே அவைகளை முறைப்படுத்துவது அல்லது கட்டுப்படுத்துவது என்பது காலத்தி னுடைய தேவையாக இருக்கின்றது.

"*Yoga*" *Exercises to the Prisoners.*

*238 Q.—THIRU D.V. DMONTE: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state whether there is any proposal with the Government to teach "Yoga" exercises to the prisoners?

கைதிகளுக்கு "யோகாசனப் பயிற்சி."

திரு. டி. வி. டி'மாண்டி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

காவலில் இருக்கும் கைதிகளுக்கு "யோகாசனப் பயிற்சி" அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

Youth Service Corps.

*239 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to revise the service scheme of the Youth Service Corps in the State: and

(*b*) if so, the details thereof?

இளைஞர் அணி.

திரு. வே. தங்கப்பாண்டியன்: (அ) மாநிலத்தில் இளைஞர் அணி யின் பணித்திட்டத்தை மாற்றியமைக்க அரசிடம் ஏதும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆமெனில் அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.